# ராஜலட்சுமி ஸ்ரீனிவாசன் நினைவு அறக்கட்டளை நிறுவனம்

www.rajifoundation.org.in

அலுவலகம் :
F–4, தாத்ரி பிளாக், ஹூரா பிரித்வி அபார்ட்மென்ட்
141, காமராஜர் சாலை, கிழக்கு கொட்டிவாக்கம்
சென்னை – 600 041

ஏப்ரல் 2014

**ராஜலட்சுமி சீனிவாசன் நினைவு அறக்கட்டளை நிறுவனம்** பேராசிரியர் ராஜலட்சுமி சீனிவாசனின் (ராஜி), தொலைநோக்குப் பார்வையைப் பாராட்டுவதோடு அவர் பெற்றிருந்த ஆற்றலை, ஆர்வ எழுச்சியை உயிர்த்துடிப்புடன் வைப்பதாகும். பன்முக ஆளுமையைப் பெற்ற அவர் மிக இயல்பாகவும் எளிதாகவும் ஒரு தோழியாக, அறிவுரையாளராக, ஆசிரியராக, நிர்வாகியாக, பெண்கள் செயல்பாட்டாளராக, சமூகப் பணியாளராகத் தலைவியாகத் திகழ்ந்துள்ளார். அவரோடு தொடர்புகொண்டவர் மனங்களில் ஒரு சிறந்த தனித்த இடத்தைத் தனதாக்கிக் கொண்டுள்ளார். எந்தவித நிகழ்வுகளையும் வெளிப்படுத்தாமல் அவருடைய உதவி யாருக்குத் தேவையோ அவரின் மனநிலையைத் தக்கவைத்துக் கொள்ளச் செயல்பட்டுள்ளார். அறச்சிந்தனையுடைய சமூகச் சேவைக்கானத் திட்டங்களை முன்னெடுத்துச் சென்ற ராஜியின் செயல்பாடுகளைத் தொலைநோக்குப் பார்வை, நோக்கம் ஆகியவற்றுக்கு அரண் செய்கிற வகையில் நிறுவனத்தின் பல்வேறு செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

## பள்ளிக்கல்வி

அனைத்துக் குழந்தைகளும் அவரவர் வழியில் உலகை அறிந்து கொள்ளும் இயல்பான ஆர்வமும் தாகமும் கொண்டுள்ளார்கள் என்பதில் இந்த நிறுவனம் நம்பிக்கைக் கொண்டுள்ளது. அவர்கள் ஆற்றலும் தனித்திறமையும் பெற்று மலர்வதற்குக் காத்திருக்கிறார்கள். ஆயினும் அவர்களுக்கான வாய்ப்புகள் பெரும்பாலும் சமத்துவமின்றி உள்ளன. நிறுவனம் இந்தச் சமத்துவமின்மையைப் போக்கித் தரமான, முழுமையானக் கல்வியை அளிக்கும் முயற்சிகளுக்கு கீழ்க்கண்ட முறைகளில் ஆதரவளிக்கும்.

- கற்பித்தல் முறையை மேம்படுத்திக் கருத்தாக்கத்தை அறிவு சார்ந்த நிலையில் உயர்த்தும் நிலையைப் பெறல்
- குழந்தைகளின் மொழியறிவு, பிறரோடு தொடர்பு கொள்ளும் திறன் ஆகியவற்றை உயர்த்துவதோடு அவர்களின் விமர்சன பார்வையை, புதியதைப் படைக்கும் ஆற்றலை வளர்ப்பதற்கானத் திட்டங்களை உருவாக்கல்
- கலை, இசை, பண்பாடு மற்றும் விளையாட்டுச் செயல்பாடுகள் ஆகியவற்றைக் கற்ற அனுபவத்தை அர்த்தமுடையதாக ஆக்கவும் அவற்றை ரசிக்கவும் குழந்தைகளின் ஒட்டுமொத்தமான வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் விதமாகவும் அமைய முயற்சி மேற்கொள்ளல்
- உடல்நலன், உடல் நல இயல், உணவு மற்றும் ஊட்டச்சத்து ஆகியவற்றைக் குழந்தைகள் நடைமுறைப்படுத்த குறிப்பாக இந்திய மருத்துவ முறைப்படி எங்கெங்கு முடிகிறதோ அங்கெல்லாம் உதவும்படியான திட்டங்களுக்குத் துணைநிற்றல்
- புதிய கற்பித்தல் முறைகளையும் கற்பிக்கும் கருவிகளையும் மேம்படுத்தி அவற்றை அறிமுகம் செய்தும் ஊக்கப்படுத்துதல்
- மாணவர்களுக்கிடையே ஒரு சுமுகமான வளர்ச்சிக்குத் துணை செய்யும் அன்பான சூழலை வளர்த்தல்
- நம்முடைய மக்களுக்கும் நாட்டுக்கும் உகந்த பள்ளிக் கல்வியை, கல்வி முறையைப் புரிந்து கொள்ளவும் பயிற்சியை நடைமுறைப் படுத்தவும் உதவி செய்து அவர்களை உருவாக்கல்.

## உயர்கல்வி

முதல் தலைமுறை மாணவர்களுக்குக் குறிப்பாகப் பெண்களுக்கு உயர்கல்வியைத் தொடர உரிமையும் அதிகாரமும் அளிக்க வேண்டுமென்ற நோக்கம் கொண்டுள்ளது இந்நிறுவனம். உயர்கல்வி மற்றும் ஆய்வுக்கானத்தளங்களில் உயர்ந்த தரத்தைப் பெற முயலும் திட்டங்களை வரவேற்கவும் உயர்த்தவும் இந்நிறுவனம் உதவ உறுதி பூண்டுள்ளது.

- உயர்கல்வியைப் பெறும் மாணவர்க்கு வழிகாட்டலும் ஆலோசனையும் தருவதோடு நிதி உதவியும், அறிவுரையும் தந்து உதவுதல்
- பிறரோடு தொடர்பு கொள்ளும் தனித்திறனும், நடத்தும் முறையும் மேம்பட பாலமாக அமையும் நடைமுறைப் பயிற்சியை மேற்கொள்ளல். பட்டம் பெற்றபின் பணியாற்றத் தேவையான இடம் ஏற்பட ஆலோசனையும் உதவியும் செய்தல்
- உயர்கல்வி மற்றும் ஆய்வுகள் நம்முடைய பொருளாதாரத்திற்கும் சமூகத்திற்கும் ஏற்ப நேர்மையான முறையில் மட்டுமன்றி உலக அளவில் போட்டிக்குப் பொருத்தமான வகையில் எப்படி அமையவேண்டுமென்பதைக் கண்டறிய வேண்டும்.

## வாழ்க்கைத் தொழில் சார்ந்த பயிற்சி

- முதல் தலைமுறையைச் சார்ந்த எல்லா மாணவர்களும் முழுமையானத் திறமையோடும் நவீன வாழ்க்கைப் பணிக்குத் தகுதி படைத்தும் பொருளாதாரக் காரணத்தால் வெளியேறுகிறார்கள். அதனால் நிறுவனம் வாழ்க்கைத் தொழிலுக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்திக் குறிப்பாகப் பெண்களுக்கானதை மேற்கொள்ளும்.
- தொழில் சார்ந்ததும் பணிசார்நததுமானப் பயிற்சித் திட்டங்கள், தகுந்த பாடப்பிரிவில் சேர்வதற்கான நிதி மற்றும் அறிவுரை உதவி செய்யும் தன்மைபற்றிய விழிப்புணர்வை உண்டாக்குதல்.
- ஏற்கனவே இருக்கின்ற தொழில் சார்ந்த பயிற்சிக்கும் நிறுவனங்களை மாணவர்கள் அடையுமாறு செய்வதும் ஆற்றல் வாய்ந்த தொழில் சார்ந்த நிறுவனங்களோடு ஒருவித இணைப்பையும் உண்டாக்கல்.
- புதியதான வாழ்க்கைத் தொழிலுக்குரிய பயிற்சித் திட்டங்கள் எங்கெல்லாம் எப்படித் தேவையோ அங்கெல்லாம் ஆரம்பித்தல்.

## பெண்களின் அதிகாரத்துவம்

- கல்வி மற்றும் தொழில் மூலமாகப் பொருளாதாரத்தில் சுயசார்புடையவர்களாகவும் தனித்துவம் வாய்ந்தவர்களாகவும் உருவாகும் அதிகாரத்தை, உரிமையை அடைய உதவ வேண்டுமென்ற நோக்கம் கொண்டுள்ளது.
- நிதி உதவியும், திறனை மேம்படுத்தும் வாய்ப்பையும் பெண்களுக்குத் தந்து பெண் தொழிலதிபர்களை உருவாக்கப் பெண்களுக்கு உதவுதல்
- பெண்ணுக்கு எதிரான பொருளாதார மற்றும் சமூகத் தடைகளை நீக்கவும் போக்கவும் அதற்கானத் திட்டங்களுக்கு உதவுதல்

## ஆய்வு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் கருத்தை உருவாக்கல்

- ஆராய்ச்சிக் கல்விக்குத் துணை நிற்கும் குறிப்பாக இந்தியச் சூழலுக்குப் பொருத்தமான சமூக அறிவியல் அறிவிற்கு நிறுவனம் உதவும்.
- கல்வி, பயிற்சி, ஆய்வு ஆகிய தளங்களில் உரிமை குறைந்த சமூகப் பிரிவு மக்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்து, அவற்றைப் பரப்புவதும் மக்களின் பொதுக் கருத்தையும் அவர்களுக்கு ஏற்ப உருவாக்குதல்.
- நிறுவனப் பணியைப் போன்ற சேவையில் ஈடுபட்டிருக்கும் மற்ற ஆற்றல் படைத்த சேவை நிறுவனங்களோடு இணைந்து சேவையின் தன்மையை வெளிப்படுத்துதல்.

## ராஜலட்சுமி சீனிவாசன் (ராஜி)

திருமதி லட்சுமி சீனிவாசனுக்கும் எஸ்.ஆர். சீனிவாசனுக்கும் ராஜி ஸ்ரீரங்கத்தில் பிறந்தார். சுதந்திரப் போராட்ட வீரரான கே. சந்தானம் அவர்களின் பேத்தி என்ற பேற்றினையும் பெற்றவர். ஸ்ரீரங்கத்திலும் ஊட்டியிலும் பள்ளிக்கல்வியைப் பயின்றவர். கல்லூரி மற்றும் பல்கலைக்கழகக் கல்வியைக் காரைக்குடியிலும் சென்னையிலும் பெறும் வாய்ப்பைப் பெற்றதோடு நியூயார்க்கில் பொருளாதாரத்தைப் பயின்ற திறன் பெற்றவர். 1973–ல் எத்திராஜ் கல்லூரியில் தன்னை இணைத்துக் கொள்ளும் முன் திருச்சி சீதாலட்சுமி கல்லூரியிலும் சேலம் சாரதா கல்லூரியிலும் பணியாற்றிய அனுபவம் பெற்றவர். 2002 ஆம் ஆண்டு ஓய்வு பெறும்வரை தொடர்ந்து எத்திராஜ் கல்லூரிப் பொருளியல் துறையில் பணியாற்றியவர்.

கல்லூரி நாட்களிலிருந்தே ராஜி உரிமையற்றவர்க்கும் உரிமை குறைந்தார்க்கும் பாதிக்கப்பட்ட சமூகத்தின் பிரிவினருக்கும் தனிப்பட்ட முறையிலும், ஓர் அமைப்பின் பகுதியாக அமைந்தும் பணியாற்றுவதில் மிகுந்த ஆர்வம் காட்டி வந்துள்ளார். இந்தப் பரந்த சமூக அக்கறையானது அவருடைய பொருளாதாரப் பேராசிரியர் பணியிலும் தொடர்ந்ததோடு மகிழ்ச்சியான இல்லத்தையும் உருவாக்கி வாழ்நாள் முழுதும் பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு உழைத்த பெருமைக்கு உரியவர்.

குப்பத்து ஏழை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த அவர்களை அமைப்பு ரீதியாக ஒன்றிணைத்து உழைத்தவர். பெண்களை ஒருங்கிணைத்து அவர்களின் அடிப்படை உரிமைகளுக்கும் கண்ணியத்திற்கும் போராடியவர். பெண்ணுரிமை இயக்கத்தின் அமைப்பை உருவாக்கிய ஓர் முக்கிய உறுப்பினர். கல்லூரி ஆசிரியர் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டு அவர்கள் பணியாற்றும் சூழலை மேம்படுத்த செயல்பட்டவர். இவையனைத்தும் அவர் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட செயல்பாடுகளில் சில.

எப்போதும் குழந்தைகளோடு இருப்பதை மிகவும் விரும்பும் மனோபாவம் கொண்டவர். அடையாறில் உள்ள அவ்வை இல்லத்தில் ஒரு தன்னார்வத் தொண்டராகத் தன்னை இணைத்துக் கொண்ட போது அது நிறைவு பெற்றது. 2013–ன் இறுதிவரை அத்தொண்டு தொடர்ந்தது. அவ்வை இல்லத்தின் முக்கிய உறுப்பினராக இருந்து பன்முக ஆளுமையோடு ஒரு தொண்டராக, ஓர் ஆசிரியராக, ஒரு நிர்வாகியாக, இல்லத்திற்கு நிதி திரட்டுபவராக மற்றும் பல்வேறு வகைகளில் அந்த நிறுவனத்தேவைக்கு ஏற்ப இடையறாது பணியாற்றினார்.

புதிய பாதை அமைப்பதிலும், புதிய தீர்வுகள் காண்பதிலும் ராஜி எப்போதும் உறுதியாக நின்றவர். அவர் எந்த அமைப்பின் பகுதியாக இருந்தாலும் அதில் தன்னை ஒரு நாளும் சிறைப்படுத்திக் கொண்டதில்லை. பிறர் கூறுவதை மிகுந்த பொறுமையோடு செவி சாய்க்கும் பண்புடையவர். தாங்கள் செய்கிற பணியின் மதிப்பை உணர்வதோடு அதன் தகுதியையும் அவரின் உடனிருப்பில் அனைவரும் உணரும் தன்மையர். ஏழை, பணக்காரர், சாதி, மத, ஆண், பெண் என்ற எந்தவித வேறுபாடுமின்றித் தன்னோடு தொடர்பு கொண்டோர் அனைவரிடமும் தன் சுயநல மற்ற சேவை மனோபாவத்தாலும் அக்கறையாலும் அவர்கள் வாழ்க்கையை இதயத்தால் அரவணைத்தவர். அவர்கள் வாழ்வை மலரச் செய்த பெருமிதங் கொண்டவர்.

ராஜலட்சுமி சீனிவாசன் நினைவு அறக்கட்டளை நிறுவனம், பொது மக்களின் அறக்கட்டளை நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. நிறுவனத்தின் அனைத்து சேவை செயல்பாடுகளுக்கும் மக்களின் பேராதரவைப் பல்வேறு வகையிலும் வேண்டுகிறது நிறுவனம்.

### தொடர்பு கொள்ள

**என். சாந்தி**
அறக்கட்டளை மேலாளர்
கைபேசி : 94440 32890
Email : nstempom@gmail.com

**சி. என். கிருஷ்ணன்**
தலைவர்
கைபேசி : 98410 26505
E-mail : cnkrish@gmail.com